DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 39/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தட்சிணாமூர்த்தி |
| Father / Husband Name | வரதன் |
| Village | சோத்துப்பாக்கம் |
| Taluk | செய்யூர் |
| Age | 55 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **23.10.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சோத்துப்பாக்கத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 28.06.2024 ம் தேதி எனது அண்ணன் மகள் பிரியதர்ஷினி என்பவர் அவரது கணவர் காசிராமன் என்பவருடன் அவர்களுடைய மகள் தன்சிகாஶ்ரீ என்பவருடன் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் அவரது மகளுக்கு உடநிலை சரியில்லாததால் அவளை அழைத்துக்கொண்டு சோத்துப்பாக்கத்தில் இருந்து செய்யார் நோக்கி சென்றபோது ஒரு கார் அதிவேகமாக வந்து என் மகள் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்தில் என் மகள் மற்றும் தன்சிகாஶ்ரீ பலத்த காயமும் காசிராமன் என்பவருக்கு லேசான காயமும் ஏற்பட்டது. பின்னர் காயம் பட்ட நபர்களை சிகிச்சைக்காக SRM மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். என் மகள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என் பேத்தி தன்சிகாஶ்ரீக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டதால் அதற்கான சிகிச்சை பெற்றார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண்ணை சம்பவயிடத்தில் இருந்த கார்த்திகேயன் என்பவர் எனக்கு அனுப்பினார். மேலும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் மது போதையில் இருந்ததாகவும் எனக்கு தகவல் சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் மகள் பிரியதர்ஷிணி விபத்தில் இறந்த விவரத்தை போலிசார் விசாரணையிலும் எனது புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பட்டியல் சாட்சி 2 காசிராமன் எனது மருமகன் ஆவார். பட்டியல் சாட்சி 3 முதல் 6 வரையானவர்களை எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டியவர் மது போதையில் இருந்த விவரத்தை நான் எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுத்த பின்னர் தான் வாகனத்தை ஓட்டியவர் மது போதையில் இருந்த விவரத்தை சொன்னார்கள். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து

V-(signature)

புகார் கொடுத்த அன்று விசாரித்தார்கள். அதன் பின்னர் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. பாதிக்கப்பட்ட நபர் எனது அண்ணன் மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

V. [signature]

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

[signature] 23/10/25

Judicial Magistrate No.II
Madurantakam